# சின்னஞ் சிறு பாவி
# (லூக்கா 19:1–10)

வேதத்தில் உள்ள அநேக நபர்கள் ஏறக்குறைய அறியப்படாதவர்களாய் இருக்கின்றனர். ஆனால் புதிய ஏற்பாட்டில் வரும் சகேயு[1] என்ற நபரை அவர் ஒரு சிறிய காட்சியில் வந்திருப்பினும், குழந்தைகள் கூட அறிவார்கள். குழந்தைகளுக்கான வேத பாட வகுப்பில் இப்பாடல் பாடப்படுகிறது:[2]

*சகேயு ஆயக்காரன் குள்ளமானவன்*
*காட்டத்தி மரத்தில் ஏறினான்;*
*கர்த்தரைப் பார்க்க விரும்பினான்.*
*கர்த்தர் அவ்வழியில் வந்ததால்,*
*காட்டத்தி மரத்தை நோக்கினார்,*
*“சகேயு, இறங்கி வா,*
*சாப்பிடப் போவோம் உன் வீட்டுக்கு;*
*சாப்பிடப் போவோம் உன் வீட்டுக்கு!”*[3]

துரதிர்ஷ்டவசமாக, நம்மில் அநேகர் எட்டு வயதடையும் போது, சகேயுவைப்பற்றிப் படிப்பதை நிறுத்திவிடுகிறோம். சகேயுவின் வரலாற்றில் அழகான மற்றும் வல்லமையான பாடங்கள் அநேகம் உண்டு. உதாரணத்திற்கு இச்சம்பவத்தில், ‘‘இழந்துபோனதைத் தேடவும், இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்தார்’’ (லூக். 19:10) என்ற வசனம் நமக்கு உடனடியாக நினைவுக்கு வருகின்றது. எந்தச் சம்பவம் இந்த மாபெரும் வசனப் பகுதியை கொண்டுவந்தது என்று தெரியுமா? இது சகேயுவின் வரலாற்றில் உள்ளதாகும்.

லூக்கா 19ம் அதிகாரத்தைச் சற்று திருப்பி, இந்த “சின்னஞ் சிறு மனிதன்” பற்றிய சம்பவத்தைக் கவனிப்போம். இவன் ஒரு “சின்னஞ் சிறு பாவியாக” இருந்தான். எனவே இந்த வேத பகுதியிலிருந்து சில “சின்னஞ் சிறிய பாடங்களை” எடுத்துத் தர நான் விரும்புகிறேன்.

# செல்வத்தைப்பற்றிய சிறிய பாடம் (லூக்கா 19:1-2)

"அவர் எரிகோவில் பிரவேசித்து அதன் வழியாக நடந்து போகையில்" (வ. 1). என்று இந்த அதிகாரம் தொடங்குகின்றது. இயேசு எருசலேம் நோக்கிச் சென்றுகொண்டு இருந்தார். பல மாதங்களாக "தமது முகத்தை எருசலேமின் பக்கமாகத் திருப்பி" பயணம் செய்துகொண்டிருந்தார். ஆனால் இப்பொழுது உண்மையிலேயே எருசலேமுக்குச் சென்றுகொண்டிருந்தார். அவர் வெகு அருகிலிருந்தார்; எருசலேமிருந்து பதினேழு மைல்கள் தூரத்திலேயே எரிகோ இருந்தது.

அது ஒரு முக்கியத்துவமான பயணமாயிருந்தது. அவர் எருசலேமை நெருங்கி வர வர, கூட்டம் பெருகிக் கொண்டே வந்தது. கவனிக்கக்கூடிய நிகழ்ச்சி ஒன்று முன்னதாகவே எரிகோவில் நடந்திருந்தது - குருடனான பர்திமேயுவை சுகமாக்கினது (லூக்கா 18ன் முடிவில் எழுதப்பட்டிருக்கிறது). இப்பொழுது இயேசு அங்கே ஒரு சின்னஞ் சிறு பாவியை சந்திப்பார்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களிலிருந்தே இருக்கக் கூடியதான பழைமையான நகரங்களில் ஒன்று எரிகோ பட்டணம் ஆகும்.[4] இன்றைய நாட்களில் நீங்கள் அங்கு சென்றால், பல அடுக்குகள் ஒன்றின்மேல் ஒன்றாக உள்ள மலைகளையும் அவைகளின்மேல் பழைய நகரங்கள் ஒன்றின் மேல் ஒன்றாய் கட்டப்பட்டிருந்த விதத்தையும் பார்க்கலாம்.[5]

இயேசு அப்பட்டணத்திற்குச் சென்ற சமயத்தில் அதன் ஜனத் தொகை ஏறக்குறைய 100,000 ஆகும். எரிகோ பட்டணம் அதன் பனைமரங்கள்[6] மற்றும் ரோஜாத்தோட்டங்கள் ஆகியவற்றால் மிகவும் நன்கறியப்பட்ட ஒரு பட்டணம் ஆகும். பெரிய ஏரோது மற்றும் அவன் மகன் அர்க்கெலாயு ஆகியோர் எரிகோ பட்டணத்தை மேலும் அழகுபடுத்தினர். அவர்கள் அங்கு ஒரு பெரிய வெள்ளை அரண்மனை, ஒரு காட்சிக்கூடம் மற்றும் ஒரு நீச்சல்குளம் ஆகியவற்றைக் கட்டினர்.[7] அந்நகரின் சில தெருக்களில் காட்டத்திமரம் என்று வேதத்தில் குறிப்பிடப் படும் மரங்கள் வரிசையாக இருந்தன.[8] இவைகள் மல்பெரி இலைகள் போன்ற இலைகளைக் கொண்ட மல்பெரி அத்தி

மரங்கள்[9] ஆகும். இவைகள் முப்பது முதல் நாற்பது அடி உயரம் வரை வளரும். இவைகள் குறுகிய அடிமரத்துடன், தரையைத் தொடும்படி பரப்பியிருக்கும் கிளைகளை உடையதாயிருக்கும். களைப்படைந்த பிரயாணிகள் இதன் நிழலில் இளைப்பாறு வார்கள்.

எரிகோவில் அநேக செல்வங்கள் இருந்தன. அந்த செல்வங்க ளுக்கான மூலகாரணங்களில் ஒன்று அங்கு நடைபெற்ற விவசாயம் ஆகும். அங்கிருந்த அநேக பேரீச்சை மரங்களின் பழங்கள் உலகம் முழுவதிலும் விற்கப்பட்டன. எரிகோவின் நறுமணப் பூந்தோட்டங்கள் அநேக மைல்கள் வரை நறுமணம் வீசக்கூடியதாயிருந்தபடியினால் அதுவும் எரிகோ உலகப் புகழ் பெறக்காரணமாயிற்று. இப்பூக்களிலிருந்து எடுக்கும் தைல மானது அதன் நறுமணம் மற்றும் குணமாக்கும் சக்தி இவைகளால் உலகப்புகழ் பெற்றதாயிருந்தது.

எரிகோவின் இட அமைப்பு அதன் செல்வந்தத்திற்கு இன்னொரு காரணமாகும். ஒரு பெரிய வியாபார சாலையின் இருதயம் போன்ற மையப்பகுதியாக இப்பட்டணம் இருந்தது. எருசலேமுக்குச் செல்லவும், யோர்தானைக் கடந்து அதன் கிழக்குப் பகுதிக்குச் செல்லவும் எரிகோவிலே சாலைகள் இருந்தன. வடக்கிலிருந்து தமஸ்கு, தீரு, சீதோன். மேற்கிலி ருந்து செசரியா, யோப்பா, தெற்கிலிருந்து எகிப்து ஆகியவற்று டன் எரிகோவுக்கு வியாபாரத் தொடர்பு இருந்தது. எரிகோ வின் வழியாகச் செல்லும் எல்லாப் பொருட்களுக்கும் வரி விதிக்கப்பட்டது. (இதை உங்கள் கவனத்தில் வையுங்கள்).

ஒரு வேளை இயேசு எரிகோவை விரைவில் கடந்துசென்று எருசலேம் பயணத்தைத் தொடரத் திட்டமிட்டிருக்கலாம். அப்படியிருப்பின், ஏதோவொன்று நிகழ்ந்து அவரது பயணத் திட்டத்தை அவர் அதனிமித்தம் மாற்றியிருக்கலாம்.

“சகேயு என்னப்பட்ட ஒரு மனுஷன் ...” (வ. 2ஆ). “சகேயு” என்ற எபிரெயப் பெயர் ‘‘சுத்தமான’’ ‘‘நீதியுள்ள’’ என்று பொருள்படும். இப்பெயர் இதை வைத்த தாய்க்கு தன் குழந்தை யிடம் உள்ள நம்பிக்கையை தெளிவாக்கும். இருப்பினும் எரிகோவின் மக்களால் சகேயு சுத்தமுள்ளவனாக, நீதியுள்ள வனாக நோக்கப்படவில்லை. அதற்குக் காரணம் வேத வசனத் தில் குறிப்பிடப்பட்டுள்ளது: “ஆயக்காரருக்குத் தலைவனும்”

(வ. 2அ).[10] இன்றிருப்பதைக் காட்டிலும் அன்றைய நாட்களில் வரிவசூலிப்பவருக்கு அதிகமான புகழ்ச்சியொன்றும் இல்லை. ''எனது பிள்ளை வளர்ந்து ஒரு வரிவசூலிப்பவன் ஆக வேண்டும்'' என்று எந்தப் பெற்றோரும் சொன்னதாக நான் அறியவில்லை. "நான் வளர்ந்து பெரியவன் ஆகும்போது வரி வசூலிப்பவன் ஆவேன்" என்று எந்தக் குழந்தையும் சொல்லி யதாக நான் அறியவில்லை.

அநேக வருடங்களாக உள்நாட்டு வருவாய்த் துறைப் பிரிவில் பணியாற்றிய ஒருவர் எனது நண்பராவார். சமயங்களில் அவர் தனது பணி விபரங்களை என்னுடன் பகிர்ந்துகொள் வதுண்டு. உள்நாட்டு வருவாய்த் துறையின் கீழ் அவர் சிலகாலம் பணியாற்றினார். அதன்பின், ஜனங்கள் தங்கள் வருவாய்க் கேற்ற வரி கட்டுகின்றார்களா என்று துப்பறியும் அந்த வேலை யைத் தாம் வெறுப்பதாக என்னிடத்தில் கூறினார். எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவாக அத்துறையிலிருந்து பணி ஓய்வு பெற்றுக்கொண்டார்.

கிறிஸ்துவின் காலத்தைப் பார்க்கிலும், இந்நாட்களில் வரி வசூலித்தல் என்பது மதிப்புள்ள ஒரு வேலையாக இருக்கிறது. பலஸ்தீனத்தில் ரோம அரசாங்கத்திற்காக யூதர்கள் சிலர் வரிவசூலிக்கும் வேலை செய்துகொண்டிருந்தனர். தங்கள் தேசத்தை மேற்கொண்டு அடிமைப்படுத்தி வைத்திருக்கும் நாட்டிற்காக, அவர்கள் தங்கள் சொந்த ஜனங்களிடத்திலேயே வரிவசூலித்துக் கொண்டிருந்தார்கள்! மேலும் இந்த ஆயக்காரர் கள் பெரும்பாலும் நேர்மையற்றவர்களாயிருந்தார்கள். ஒருவன் ஆயக்காரனாக வேண்டுமானால் ரோம அரசிட மிருந்து சலுகை பெற வேண்டும் (பெரும்பாலும் இதற்கு பெரிய லஞ்சம் தர வேண்டியிருக்கும்). பிறகு ரோமர்கள் ஒவ்வொரு ஆண்டும் அவன் எவ்வளவு வசூலிக்கவேண்டும் என்ற தங்கள் எதிர்பார்ப் பைக் கூறுவார்கள். சில சமயம் அத்தொகையும் முன் பண மாய்ச் செலுத்தப்பட வேண்டும். ரோம அரசிற்குத் தான் செலுத்தியதைக் காட்டிலும் அதிகமாய் ஜனங்களிடம் வசூலிப்பதன் மூலம் ஆயக்காரன் இலாபம் சம்பாதிப்பான். அநேக ஆயக்காரர்கள் தங்களால் எவ்வளவு வசூல்செய்ய முடியுமென்று எண்ணுகின்றனரோ, அவ்வளவு வசூல் செய்து விடுவர்.[11] பேராசை, நாணயமின்மை மற்றும் ஊழல்

ஆகியவற்றை விளைவிக்கும் அமைப்பாக இது இருந்தது.

இதன் விளைவாக மற்ற யூதர்கள் ஆயக்காரர்களை, இனி அவர்கள் ஆபிரகாமின் குமாரர்கள் அல்லவென்றும், காட்டிக் கொடுப்பவர்கள் மற்றும் நிலையைத் தலை கீழாக்கியவர்கள் என்றும் கருதினார்கள். ஆயக்காரன் ஓட்டுப்போட முடியாது. ஆயக்காரன் நீதிமன்றத்தில் சாட்சிகூற முடியாது. ஆயக்காரன் ஜெப ஆலயத்தினுள் செல்ல முடியாது. டல்மட்[12] நூலில் திருடன், கொள்ளைக்காரன் மற்றும் ஆயக்காரன் ஆகிய மூவரிடம் மட்டும் யூதர்கள் பொய் பேசலாம் என்று கூறப் படுகிறது. வேத வசனத்திலும்கூட விரும்பத்தகாதவர்களுடன் ஆயக்காரர்களை இணைத்துக் கூறப்படுகிறது. "அநேக ஆயக் காரரும் பாவிகளும் வந்து" (மத். 9:10)[13]; "அஞ்ஞானியைப் போலவும் ஆயக்காரனைப்போலவும்" (மத். 18:17), "ஆயக் காரரும், வேசிகளும்" (மத். 21:31-32), "பறிகாரர், அநியாயக் காரர், விபசாரக்காரர், ... ஆயக்காரன்" (லூக். 18:11).

சகேயு ஆயக்காரன் மட்டுமன்றி, ஆயக்காரருக்கு தலைவனு மாயிருந்தான். இதை, ''வரிவசூல் ஆணையாளர்'' என்று பார்க்ளே மொழிபெயர்க்கின்றார். சகேயு அந்தப் பகுதி முழு மையும் வரிவசூல் செய்யும் சலுகைப் பெற்றிருக்க வேண்டும். பலஸ்தீனியப் பகுதியில் மூன்று வரிவசூல் மையங்கள் இருந்தன: செசரியா, கப்பர்நகூம் மற்றும் எரிகோ. எனவே முழு தேசத்திலும் மூன்றில் ஒரு பகுதியில் வரிவசூலிக்க சகேயு ஒப்பந்தம் பெற்றிருந்தான். அப்படியானால், பலஸ்தீனியத்தின் அந்தப் பகுதி முழுமையும் தனக்காக வேலை செய்யும் ஆயக்காரர்களை அவன் வைத்திருந்தான் - அந்த ஆயக்காரர் களிடமிருந்து அவனுக்கு ஒரு குறிப்பட்ட சதவிகிதம் கிடைத்து வந்தது. அப்பகுதியிலிருந்த யூதர்களைப் பொறுத்தமட்டில், சகேயு உள்ளூர்க் கொள்ளைக் கும்பலின் தலைவனாகக் கருதப் பட்டான்; அவன் ஒரு தாதாவாகவும் கருதப்பட்டான்.[14]

இப்படிப் பரந்த விரிந்த அளவில் சகேயுவின் தொழில் இருந்ததால், "ஐசுவரியவானுமாயிருந்த" (வ. 2ஆ)[15] என்ற வசன பகுதியை வாசிக்கையில் நாம் ஆச்சரியப்பட ஏதுவில்லை. எரிகோ பட்டணம் வியாபாரச் சாலையில் முக்கிய இடத்தைப் பெற்றதுபற்றி ஏற்கனவே நாம் குறிப்பிட்டுள்ளோம். அது ஆயக்காரருக்கு இலாபம் தரும் இடமாயிருந்தபடியினால்,

சகேயு அதன் முழு ஆதாயத்தையும் பெற்றிருந்தான்.

சகேயுவின் செல்வங்கள் அவனை சந்தோஷமான மனிதனாக்கியிருந்ததா? சகேயு நிறையப் பணம் வைத்திருந் தாலும், சந்தோஷமடையவில்லை என்று கூறுமளவிற்கு இந்த வேத வசனப் பகுதியை நான் ஆழமாய்ப் படிக்கவில்லை என்றெண்ணுகிறேன். எரிகோவில் அவன் மிக அதிகமாய் வெறுக்கப்பட்ட மனிதனாயிருந்திருக்க வேண்டும். இயேசு அவனுடைய வீட்டிற்குச் சென்றபோது, "... இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படிபோனார்" (வ. 7). என்று அவர்கள் முறுமுறுத்ததாக வேதம் கூறுகின்றது. நகரிலேயே அதிகம் வெறுக்கப்பட்டவராய்-மொத்தமாய் ஒதுக்கப்பட்டவரா யிருக்க நீங்கள் எப்படி விரும்புவீர்கள்? உங்கள் மனைவி குழந்தைகளின் நிலை எப்படியிருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள்!

எல்லோராலும் இப்படி வெறுக்கப்பட்ட நிலை எப்படி யிருக்கும் என்று எனக்குத் தெரியாது, ஆனால் இப்படிப் புறம் பாக்கப்படுவது விளையாட்டுக் காரியமல்ல என்று எனக்குத் தெரியும். சகேயுவின் புகழ்ச்சிக்குறைவுபற்றி நினைக்கும் போது, எனது சிறு வயதில் நடந்த ஒரு சம்பவம் நினைவுக்கு வருகின்றது. நாங்கள் அநேகர் ஒன்று கூடி, மட்டைப் பந்தாட் டம் விளையாடினோம். நான் என்றுமே இந்த விளையாட்டை நன்றாய் விளையாடியதில்லை (எனது பயிற்சியாளர் என்னிடம் கைகள் - கண்கள் இவற்றிற்கிடைய உள்ள ஒருங்கிணைவு மிகக்குறைவு என்று விளக்கினார்), ஆனால் நான் மற்ற பையன் களோடு இருக்க விரும்பினேன். "அணிக்குத் தேர்வு செய்தல்" நிகழ்ச்சியோடு விளையாட்டு தொடங்கிற்று. ஒவ்வொரு பையனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கடைசியில் நான் ஒருவன்மட்டுமே விடப்பட்டேன். இருப்பினும், அடுத்துத் தேர்ந்தெடுக்கவேண்டிய பெரிய பையன் சற்று சங்கடப்பட்டு, பிறகு, "பரவாயில்லை, நான் ரோப்பரை எடுத்துக்கொள் கிறேன்" என்றான்.[16]

எரிகோவில் இப்படிப்பட்ட தேர்ந்தெடுத்தல் நடந்திருந் தால், சகேயுவை ஒருவரும் தேர்ந்தெடுத்திருக்க மாட்டார்கள். அவன் எந்த ஒரு அணியிலும் விளையாட அனுமதிக்கப் பட்டிருக்கமாட்டான். அவன் வெறுத்து, புறக்கணிக்கப்

பட்டவனாய் இருந்தான். அவன் மிக பரிதாபமாயிருந்திருப்பான்.

தெரிந்தோ, தெரியாமலோ சகேயு தனது வாழ்க்கையை முழுமையாக்க இயேசுமட்டுமே உதவ முடியும் என்பதால் அவரைக் காண விரும்பினான் என்று நான் நம்புகிறேன். ஒரு வேளை அவன், ஆயக்காரர், பாவிகள் ஆகியோருக்கு இயேசு சிநேகிதராயிருந்தார் என்று கேள்விப்பட்டிருக்கக் கூடும் (மத். 11:19). ஒருவேளை ஆயக்காரனாயிருந்த மத்தேயுவை தமது சீஷர்களில் ஒருவராகும்படி இயேசு அழைத்ததைக் கேள்விப் பட்டிருக்கக் கூடும் (லூக். 5:27). ஒரு வேளை இந்த மத்தேயு, சகேயுவின் நண்பராயிருக்கக் கூடும். சகேயு இயேசுவைத் தேடியதன் உண்மையான நோக்கத்தை நான் அறியேன், ஆனால் அவன் உதவியை விரும்பினான் என்பது மட்டும் உறுதி.

செல்வத்தைப்பற்றிய சிறிய பாடம் இதோ: பணமும், பொருட்களும் சந்தோஷத்தை வாங்கமுடியாது. நமது உடமைகள் யாவும் விரைவில் கடந்துவிடும்,[17] நமது பொருட்கள் நமக்கு ஆறுதல் அளிப்பதில்லை. நாம் மகிழ்ச்சியாயிருக்கவேண்டும் என்றால் மற்றவர்களுடன் நமக்கு உறவுகள் தேவை. விசேஷமாக தேவனுடன் நமக்கு சரியான உறவு இருக்க வேண்டும்.

## கர்த்தரைத் தேடுதல் பற்றிய சிறிய பாடம் (லூக்கா 19:3-4)

“இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான் (வ. 3அ). வகைதேடுதல் என்ற இந்த வார்த்தை புதிய ஏற்பாட்டில் எங்கெல்லாம் வருகின்றதோ அங்கெல்லாம் இது ஊக்கமான முயற்சியைக் குறிக்கிறது,[18] எங்குமே இது அரைகுறையான முயற்சியைக் குறிப்பதில்லை. எரிகோவின் வழியாக இயேசு செல்வதைக் கேள்விப்பட்ட சகேயு அவரைக் காண முடிவு செய்தான்.

இருப்பினும், அவன் முயற்சி செய்தபோது, “ஜனக்கூட்டத்தில் அவரைக் காணக்கூடாமல்” போயிற்று (வ. 3ஆ). எருசலேமுக்குப் புனித யாத்திரை சென்ற அநேக ஜனங்கள் இயேசுவுடனிருந்தனர்; அவரோடு அவர்கள் பயணம் சென்றனர். அதோடு அவர் வரும் செய்தி பரவியதால், எரிகோவின்

நகரத்தின் தெருக்களில் ஜனங்கள் வரிசையாகத் திரண்டு நின்றிருந்தனர் - எனவே சந்தேகமின்றி ஜனத்திரள் அதிகமாய் இருந்திருக்கவேண்டும்.

இவ்வசனத்தின் இடைப்பகுதியில் சகேயுவின் பிரச்சனை கூறப்பட்டுள்ளது: "அவன் குள்ளனானபடியால். ... அவரைக் காணக்கூடாமல்" (வ. 3ஆ) இதைத் தெளிவாய் நாம் கூறலாம்; அவன் குள்ளமானவனாய் இருந்தான். கூட்டத்தை விலக்கிக் கொண்டு அவன் முண்டியடித்துப் பார்க்க முயலுவதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது. அவன் யாரென்று ஜனங்கள் திரும்பிப் பார்த்தபோது, வெறுப்புக்குரிய அந்த ஆயக்காரனைப் பின்னால் தள்ள ஜனங்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. அவனைத்தள்ளி, அவன் முழங்கைகளை இடித்து, அவன் கால்களை அவர்கள் மிதித்தனர்.[19] அவன் பின்னால் நின்றுகொண்டு, குதித்து, கூட்டத்தினூடே பார்க்க வீண் முயற்சி செய்ததைக் கற்பனை பண்ணிப்பாருங்கள்! இயேசு கடந்து சென்றார், ஆனால் சகேயு குள்ளமாயிருந்தபடியால் கணநேரம் கூட அவரைக் காணமுடியவில்லை.

"குள்ளமான உருவம்" கொண்ட நண்பர்கள் பற்றி நான் சில வார்த்தைகளை இவ்விடத்தில் கூற விரும்புகிறேன். எரிகோவி லிருந்த சிலர் சகேயு குள்ளமாய் இருந்ததுபற்றி வெறுப்புள்ள நகைச்சுவைத் துணுக்குகள் மற்றும் மோசமான பாடல்கள் தயார் செய்திருப்பார்கள் என்று எண்ணுகின்றேன். நாம் "சின்னஞ் சிறு மனிதன்" என்று இவனைப் பற்றி பாடினாலும் அவமரியாதை செய்வதில்லை. ஆனால் சகேயு குள்ளமானவனா யிருந்ததுபற்றி எரிகோ நகரத்துக் குழந்தைகள் வெறுப்பு நிறைந்த பாடலை பாடியிருப்பார்கள் என்று நான் யூகிக் கிறேன்.[20] ஒருவருடைய உயரத்தை வைத்து அவரைக் கேலி செய்தால் நான் மோசமாக ஆகிவிடுவதுண்டு;[21] நான் அறிந்த அநேக "குள்ளமான உருவமுள்ளவர்கள்" மிகவும் விசேஷித்த வர்களாயிருக்கின்றனர். அவர்களில் அநேகர் உற்சாகம் மிக்க வர்களாயும், முதல்தரமான தகுதியுள்ளவர்களாயும் இருக் கின்றனர். வரலாற்றில், நாம் நெப்போலியனை நினைத்துப் பார்க்கின்றோம். நான் சிறுபையனாக இருந்தபோது, ஆடி மர்பி என்ற குள்ளமான மனிதர் நமது யுத்தத்தின் கதாநாயகர்களில் ஒருவராயிருந்தார்; பின்னாளில் அவர் ஒரு திரைப்பட நடிகர்

ஆனார். கடந்தகாலம் மற்றும் நிகழ்காலத்தில் வேறு அநேக திரைப்பட நடிகர்களும் கூட ''குள்ளமானவர்களாய்'' இருந்திருக்கின்றனர்.[22] ஆர்க்கி காரிசன் என்ற விவசாயித் தொழில் நுட்ப ஆசிரியர் என் மனதில் அடுத்து நினைவுக்கு வருகிற குள்ளமான மனிதர் ஆவார்.[23] அவர் பயிற்சிபெற்ற நாட்களில் அவருடன் வகுப்பில் இருந்த பெரிய பையன் களுடன் அவருக்கு எவ்வித பிரச்சனையும் ஏற்பட்டதில்லை. அவர் அவர்களின் கண்களைப் பார்த்து, "நான் குள்ளமாக இருக்கலாம், ஆனால் மிகுந்த உற்சாகமுள்ளவனாய் இருக்கி றேன்" என்று சொல்லுவதுண்டு .

சகேயுவும் இப்படி "உற்சாகமுள்ளவராய்" இருந்ததைக் கற் பனை செய்து பாருங்கள்; எந்த ஒரு செயலையும் சுலபத்தில் விட்டுவிடக் கூடியவராய் அவர் காணப்படவில்லை. அவர் இயேசுவைக் காணத் தீர்மானித்தார். ... ஆனால் எப்படிக் காண்பது? ஒரு வேளை அவர் தெருவில் வரிசையாய் நின்ற அத்திமரங்களையும், அம்மரங்களின் கிளைகளில் அமர்ந்திருந்த சிறு பையன்களையும் பார்த்திருக்கலாம், முக்கியமான ஊர் வலம் செல்லும் அந்த வேளையில், அவர் முகத்தில் புன்முறுவல் தவழ்ந்தது!

"அவர் போகும் வழியில் முன்னாக ஓடி" (வ. 4அ). வளர்ந்த மனிதர்கள், விசேஷமாக முக்கியமான மனிதர்கள் அந்நாட் களில் ஓடுவது கிடையாது. அவர்கள் மெதுவாக, பெருமிதத்து டன் நடப்பார்கள். ஆனால் சகேயுவைப் பொறுத்தமட்டில் இயேசுவைக் காண்பது என்பது, தனது கௌரவத்தைக் காட் டிலும் முக்கியமானதாயிருந்தது. தமது அங்கியைச் சுருட்டிக் கொண்டு, தமது சிறிய கால்களை முன் எடுத்து வைத்து, மெதுவாய் நடந்த கூட்டத்திற்கு முன்பாகச் செல்லும்வரை யிலும் அவர் ஓடினார்.

"அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்திமரத்தில் ஏறினான்" (வ. 4ஆ). அடிமரத்திலிருந்து செங்குத்தாக வளர்ந்திருந்த ஒரு கிளையில் தனது கால்களை ஒன்றன்பின் ஒன்றாக மாற்றி வைத்து மிகவும் கஷ்டப்பட்டு மரத்தில் ஏறினார். இந்த ஆயக்காரர் உற்சாகத்தில் சிறுபிள்ளைபோல் ஆகி ஓடவும் மரத் தில் ஏறவும் தொடங்கினார்![24] (இந்நாட்களில் நான் அதிகமாக ஓடுவது கிடையாது; மரத்தில் ஏறுவதோ கிடையாது). சகேயு

எப்படியும் இயேசுவைப் பார்ப்பது என்று தீர்மானித்தார், தமது வழியில் எந்த தடையும் ஏற்பட அவர் அனுமதிக்காமல்- கூட்டமோ, உயரமோ அல்லது கௌரவமோ எதுவும் அவரைத் தடை செய்ய அனுமதிக்காமல் அவர் முயற்சி செய்தார்.

கர்த்தரைத் தேடுதல் பற்றிய நமது சிறிய பாடத்திற்கு மோசே இவ்விதமாய் அறிவுரை கூட்டுகின்றார்: "... உன் தேவனாகிய கர்த்தரைத் தேடுவாய்; உன் முழு இருதயத் தோடும். உன் முழு ஆத்துமாவோடும் அவரை தேடும் போது, அவரைக் கண்டடைவாய்" (உபா. 4:29). சில வருடங்களுக்கு முன்பு ஒரு ஆசிரியரும் அவரது மாணவர் ஒருவரும் இணைந்து ஒரு தெருவழியே நடந்து சென்றனர். அம்மாணவர், தனது ஆசிரியரிடம் கர்த்தரை எவ்விதம் காண முடியும் என்று கேட்டார். அந்த ஆசிரியர் அவ்விளைஞனை பிடித்திழுத்து, அருகிலிருந்த தண்ணீர்த் தொட்டியொன்றில் தள்ளி, அம்மாணவனின் தலையை நீருக்கடியில் சற்றுநேரம் அழுத்திப் பிடித்தார். அவர் பின்பு அம்மாணவரை விடுவித்த போது, அவ்விளைஞன் தலையில் நீர் சொட்ட, எழுந்து நின்று காற்றுக்காக பெருமூச்சு விட்டான். அப்போது அந்த ஆசிரியர், "இப்போது நீ காற்றுக்காக எவ்வளவாய் பிரயாசப்பட்டு விரும்பினாயோ அவ்வளவாய் பிரயாசப்பட்டு விரும்பினால் கர்த்தரைக் காணலாம்" என்றார்! சகேயு கர்த்தரைக் காண செய்யவேண்டிய எதையும் செய்யத் தயாராயிருந்தார்! சத்தியத்தை அறிய இவ்வளவாய் நாம் தீர்மானம் செய்ய வேண்டும் (யோவான் 8:32)!

## இரக்கத்தைப்பற்றிய சிறிய பாடம் (லூக்கா 19:5-7)

"இயேசு அந்த இடத்தில் வந்த போது, அண்ணாந்து பார்த்து" (வ. 5அ). KJV மொழிபெயர்ப்பில், "அவர் மேல் நோக்கி, அவனைப் பார்த்தார்" என்றுள்ளது. மரத்தின் அகன்ற இலைகளுக்கிடையில் இருக்கும் தன்னை ஒருவரும் பார்க்க மாட்டார்கள் என்று சகேயு நினைத்திருக்கலாம், ஆனால் இயேசு அவரைப் பார்த்தார். இந்தச் சம்பவம் முடியும் வசனத்தை (வ. 10) இவ்விடத்தில் சற்று நினைத்துப் பாருங்கள்!

சகேயு மாத்திரம் தேடிக் கொண்டிருக்கவில்லை; இயேசுவும் தேடிக்கொண்டிருந்தார்! இயேசு இழந்து போனதைத் தேடினார்.

"... அவனைக் கண்டு: சகேயுவே நீ சீக்கிரமாய் இறங்கி வா" (வ. 5ஆ). தனது பெயரைச் சொல்லி இயேசு அழைத்த போது சகேயு எவ்வளவாய்த் திகைப்படைந்திருக்க வேண்டும்![25] இயேசுவுக்கு அவரைப்பற்றிய அனைத்தும் தெரியும்; அவர் பெயர், அவர் தேவைகள், அவர் மனதின் ஏக்கம் ... அவரது பலன்கள்கூட அவருக்குத் தெரியும்.

"... சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கி வா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும் என்றார்" (வ. 5இ). இது ஒரு திகைப்புக்குரிய விஷயமல்லவா? இயேசு தாமாகவே சகேயுவின் வீட்டில் இராவுணவு உண்ணப்போவதாகக் கூறினார்! நான் உங்களை இதற்குமுன் சந்தித்ததே இல்லை, அப்படி இருக்க திடீரென்று நான் உங்கள் முன்வந்து, "உங்கள் வீட்டுக்கு நான் வருகிறேன், இன்று இரவு என்ன உணவு தயார் செய்துள்ளீர்கள்?[26] என்று கேட்டால் உங்களுக்கு எப்படி யிருக்கும்? எப்படியிருப்பினும் சகேயுவின் வீட்டுக்குச் செல்ல வேண்டுமானால், இயேசு தம்மையே அழைத்துக் கொள்ள வேண்டியதாயிற்று - ஏனென்றால் சகேயு ஒருபோதும் அவரை தம் வீட்டிக்கு அழைக்கவில்லை. ரபீக்கள், பரிசேயர், சதுசேயர் அல்லது வேதபாரகர் எவரும் ஆயக்காரருடைய வீடுகளுக்குச் செல்வதில்லை. (சகேயு அன்றிரவு ஒரு பெரிய விருந்து செய்து நூற்றுக்கணக்கானவர்களை விருந்துக்கு அழைத்திருப்பதை என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது). சகேயு இயேசு வை அழைக்கவில்லை - எனவே இயேசு தம்மையே அழைத்துக் கொண்டார்.

''வேண்டும்'' என்ற வார்த்தையைக் கவனியுங்கள்: "இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும்." இயேசு, "இழந்துபோனதைத் தேடவும், இரட்சிக்கவும்" வந்தார், இங்கே இழந்துபோன ஒன்றைக் கண்டார். அந்தச் சிறு மனிதனை நோக்கிப் பார்த்த வேளையில் அந்த இடத்தில் அம்மனிதன் அச்சமயம் இருந்தது எதற்காக என்பதை உணர்ந்தார். அவர் சகேயுவிடம், "உன் வீட்டிற்கு இரட்சிப்பு உண்டாகவேண்டு மானால் நான் உன் வீட்டில் தங்க வேண்டும்" என்று கூறினார்!

எப்படியிருப்பினும், இயேசுவின் அழைப்பை சகேயு மறுத்திருக்கலாம் என்பதை மனதில் வையுங்கள். இயேசு யாரிடமும் தன்னை ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்துவ தில்லை. லவோதிக்கேயாவில் உள்ள கிறிஸ்தவர்களுக்கு வெளி. 3:20ல் இயேசு, "இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணு வான்" என்று கூறும்போது இச்சம்பவம் இன்னும் நன்றாய் விளக்கப்படுகிறது. இயேசு, சகேயுவின் வீட்டிற்குள் வந்து அவருடன் உணவருந்தக் கேட்டார்; ஆனால் "கதவைத் திறந்து" இயேசுவை உள்ளே பிரவேசிக்க அனுமதிப்பது சகேயுவைப் பொறுத்ததாகும் (இயேசு நமது இருதயங்களில் அருகே நின்று தட்டுகிறார்; ஆனால் நமக்குள் அவரை அனுமதிப்பதோ அனு மதிக்காமல் இருப்பதோ நம்மைப் பொறுத்ததாகும்).

சகேயுவின் பதில் எப்படியிருந்தது? "அவன் சீக்கிரமாய் இறங்கி" (வ. 6அ). அவர் அவசரமாய் இறங்குவதைப் பாருங்கள்; இன்னும்கூட, தான் கௌரவமாய் தோற்றமளிக்க வேண்டுமே என்று அவர் கவலைப்படவில்லை. "சந்தோஷத் தோடே அவரை அழைத்துக்கொண்டுபோனான்" (வ. 6ஆ). ஒருவேளை சகேயு நீண்டநாட்களாக சந்தோஷமின்றி இருந்தி ருக்கலாம், ஆனால் அச்சமயத்தில் அவன் முகத்தில் பெரிய சந்தோஷம் உண்டாயிருக்கும்,[27] இயேசு அவருடைய வாழ்வில் வந்ததால் பெரிய சந்தோஷம் அவர் வாழ்வில் உண்டானது.

வால்ட் டிஸ்னியின் வேலைப்பாடுகளை அறிந்த குழந்தைக ளுக்கு "உலகிலேயே மிகப்பணக்கார வாத்தான" ஸ்க்ரூஜ் மெக் டக்கை நன்கு தெரியக்கூடும். ஸ்க்ரூஜ் மெக்டக்கிற்கும் ஒரு நீச்சல்குளம் நிறையப் பணம் இருப்பதால் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கிறது. அந்த நீச்சல்குளத்தில் குதித்து பணத்தி னூடே நீச்சல் அடிப்பது ஸ்க்ரூஜுக்கு அதிக இன்பமாயுள்ளது, ஸ்க்ரூஜ் மெக்டக் ஒரு கார்ட்டூன் சித்திரமாயிருந்தபோதிலும் சந்தோஷமடையும் வழி இதுதான் என்று எண்ணும் ஆயிரக் கணக்கான நபர்களைக் குறிப்பதற்கு பயன்படுகின்றது, பெரிய செல்வங்களால் சந்தோஷம் கிடைப்பதில்லை என்று சகேயு கண்டுகொண்டார். மாறாக, இயேசு அவர் மேல் அக்கறையும்,

இரக்கமும் காட்டும்போது சந்தோஷம் கிடைத்ததை அவர் புரிந்துகொண்டார்.

இயேசுவும், சகேயுவும் நடந்து செல்லுகையில்,[28] வசனம் 7, கூட்டத்தின் பதில்செயலைக் கூறுகிறது: ''அதைக்கண்ட யாவரும்: இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார் என்று முறுமுறுத்தார்கள்.'' ''யாவரும்'' என்ற வார்த்தை-எரிகோ வழியாகப் பயணம் செய்தவர்கள், எரிகோவில் வாழ்ந்தவர்கள் ஒவ்வொருவரும் முறுமுறுத்தனர் என்பதையே குறிக்கின்றது. பல சமயங்களில் இயேசு தாம் இழந்துபோனதைத் தேடவும், இரங்கி உதவவும் வந்ததாகக் கூறியுள்ளார் (லூக். 15). இதற்கு முன்பு ஒருமுறை ஆயக்காரர், பாவிகள் ஆகியோருடன் விருந்துண்டதுபற்றி விமர்சிக்கப் படுகையில் அவர், "பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டி யதேயல்லாமல், சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை'' (மத்தேயு 9:12) என்றார். ஆனாலும் அதைக் கேட்டவர்களுக்கு அது ஒரு கடினமான பாடமாகவே இருந்தது.[29]

நீங்களும், நானும் இரக்கத்தைப்பற்றிய இந்தச் சிறு பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது: இயேசு ஒவ்வொருவரையும் நேசிக்கிறார். ஒருவருடைய வாழ்வில் எது நடந்திருப்பினும், ஒரு தனி நபரின் பாவம் எவ்வளவு ஆழமாய் இருப்பினும், அல்லது ஒருவர் எவ்வளவு தான் கெட்டபெயர் எடுத்திருப்பினும், இயேசு ஒவ்வொருவரையும் நேசிக்கிறார் - நாமும் அது போல் செய்ய வேண்டும்.

## மனந்திரும்புதல்பற்றிய சிறிய பாடம் (லூக்கா 19:8)

சகேயுவின் வீட்டில் இயேசு தங்கியதைப்பற்றிய விபரங்களை லூக்கா எழுதவில்லை. இயேசு அங்கு எவ்வளவு நேரம் தங்கினார்? அவர்களுடன் என்ன பேசினார்? அந்தச்சிறு மனிதனின் இதயத்தை அவர் எவ்விதம் தொட்டார்? என்றெல் லாம் நீங்கள் அறிய விரும்பவில்லையா? விளைவுகளை லூக்கா வசனம் 8 லேயே கொடுத்துவிட்டார்: "சகேயு நின்று" (வ. 8அ). சகேயு என்ன செய்துகொண்டிருந்த போதிலும், உடனே திடீரென்று ஒரு அறிவிப்புச் செய்யும்படி கூறப்பட்டுள்ளது.[30]

உணவருந்துகையில் அவர்கள் ஓய்வாக இருக்கக்கூடுமாகை யால், சகேயுவின் இந்த அறிவிப்பு உணவருந்துகையிலோ அல்லது அதற்குப் பின்போதான் கூறப்பட்டிருக்க வேண்டும். சகேயு எழுந்து நின்று, தான் கூறப் போவதின் முக்கியத்துவத்தை அனைவரும் நன்கறியும்படியாக அவர்கள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்து இவைகளைக் கூறினார்.

சகேயு இயேசுவிடம்: "ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன் ..." (வ. 8ஆ) என்றார். மூலபாஷையில் இச்சொல் நிகழ்கால வினையிலேயே உள்ளது.[31] அந்நாட்களில் ஏழைகளை ஒருவர் தேடவேண்டிய அவசிய மின்றி, யூதர்கள் இரவும், பகலும் ஏழைகளால் சூழப்பட்டிருந்த னர். ஒருவேளை அந்தக் கணத்தில், சகேயு கைநிறைய நாணயங் களை எடுத்து, கதவண்டையில் போய், அங்கிருந்த பிச்சைக் காரன் ஆச்சரியப்படும் வகையில் அவனது கையில் அக்காசுக ளைத் திணித்திருக்கலாம்![32]

சகேயுவின் வீட்டிற்கு வெளியே முறுமுறுத்தல் இருந்தது. வீட்டின் உள்ளேயோ மனந்திரும்புதல் நடைபெற்றுக் கொண் டிருந்தது.

சகேயு தனது அறிவிப்பைத் தொடர்ந்துகொண்டிருந்தார்: "... நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால்" (வ. 8இ). மூலபாஷையில் இது முதல் தரமான நிபந்தனை வாக்கியமாக, சொல்வது முற்றிலும் உண்மை என்று விளக்கத்தக்க வகையில் அமைந்துள்ளது. அந்த அநியாயம் என்பது தெரிந்தே செய்யப்பட்டதா அல்லது கவனக் குறைவால் உண்டானதா என்று நமக்குத் தெரியாது (சகேயுவுக்காக அநேகர் வேலை செய்ததை நினையுங்கள்).

"... நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன்" (வ. 8ஈ). திருடன் ஒருவன் மனந்திரும்பினால், அவன் திருடியதோடு கூட அதில் ஐந்தில் ஒரு பங்கு கூட்டி அவன் திருப்பித் தர வேண்டும் என்று நியாயப்பிரமாணம் கூறியது.[33] ஒருவன் 100 ரூபாய் திருடியிருந்தால், 120 ரூபாய் திருப்பித் தரவேண்டும். சில மிதமிஞ்சிய விஷயங்களில் இரண்டத்தனை அல்லது நாலத்தனையாக திருப்பித் தர வேண்டும் என்பது அவசியமாய் இருந்தது,[34] ஆனால் சகேயுவின் சூழ்நிலைக்கு இது எதுவும் பொருத்தமானதல்ல. சகேயு நாலத்தனையாய் திருப்பித் தர

வேண்டுமென்று கூறப்படவில்லை, ஆனால் அவர் குறைந்த பட்சம் திருப்பித் தருவதில் உற்சாகப்படவில்லை. மாறாக அவர், "நான் ஒரு மனிதனிடமிருந்து 100 ரூபாய் எடுத்திருந்தால், நானூறு ரூபாயாக திருப்பித் தந்து விடுகிறேன்" என்று கூறினார்.

வேதத்தின்படியான மனந்திரும்புதலின் முக்கிய அம்சத்திற்கு சகேயுவின் இந்த நடக்கை ஒரு அழகான விளக்கமாயுள்ளது. "மனந்திரும்புதல்" என்ற வார்த்தை "இருதயம் அல்லது நடக்கையில் மாறுதல்" என்ற பொருள்தரும் கிரேக்க கூட்டு வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப் பட்டதாகும். மனிதர்களுக்கு இதைப் பயன்படுத்துகையில் வழக்கமாக, பாவத்தைக் குறித்த அவர்களின் நடக்கையைக் குறிக்கவே இது பயன்படுகிறது. ஒருவர் தனது வாழ்க்கையில் உள்ள பாவத்தின் பயங்கர நிலையை உணர்ந்து, வாழ்விலிருந்து அப்பாவத்தை, தேவனின் உதவியோடு வேரறுக்க முடிவு செய்தல்பற்றியே இது குறிக்கிறது. மனந்திரும்புதலின் முக்கியக் கூறு எதுவெனில், கடந்தகாலத்தில் செய்த எல்லாவற்றிற்கும் ஒரு நிவாரணம் கண்டு அதைச் செய்வதேயாகும். இது மனிதாபிமான முறையில் நடைபெற வேண்டும், ஏனென்றால் சில சமயங்களில் நடந்த விஷயங்களுக்கு முழுமையான நிவாரணம் காணவே முடியாது. எடுத்துக் காட்டாக, சிலுவையில் இயேசுவை அறைந்த ஜனங்கள் மனந்திரும்பும்படி பேதுரு அவர்களிடம் கூறினார் (அப். 2:23, 38). ஆனால் அவர்கள் செய்த அந்த பயங்கர காரியத்திற்கு எவ்வகையிலும் நிவாரணம் தேட முடியாது. அநேக விஷயங்களில் இழப்பீடு செய்வது முடியக்கூடிய ஒரு செயலாகவே உள்ளது. இப்படியாகவே யோவான் ஸ்நானன் தனது செய்தியைக் கேட்டவர்களிடம், "மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்" (லூக். 3:8) என்றார். திராட்சத் தோட்டத்தில் சென்று வேலை செய்யும்படி கேட்டுக்கொண்ட தகப்பனுக்கு முதலில் மறுப்புத் தெரிவித்த மகன், "பின்பு மனஸ்தாபப்பட்டுப் போனான்" (மாற்கு 21:29) என்று நாம் படிக்கின்றோம். துரதிர்ஷ்டவசமாக, மனந்திரும்புதலின் விஷயத்தில் பெரும்பாலும் இழப்பீடு செய்தல் என்ற செயல் கவனிக்கப்படாமல் விட்டுவிடப்படுகிறது.

கர்த்தரிடத்தில் திரும்புதலில் கடினமான பகுதி ஞானஸ்

நானமல்ல, மாறாக மனந்திரும்புதலேயாகும். மனந்திரும்புதல் என்பது இருதயத்தைப் பிளப்பதை உள்ளடக்கியுள்ளது. மனந் திரும்புதல் என்பது, ஒருவர் தனது வாழ்வில் உண்மையான மாற்றங்களைக் கொண்டுவரச் செயல்படுவதைக் குறிக்கிறது. கர்த்தரிடம் திரும்பும்போது, உங்கள் வாழ்க்கையில் மாறுதல் இல்லையென்றால், நீங்கள் உண்மையாகவே கர்த்தரிடம் திரும்பியிருக்கிறீர்களா இல்லையா என்பதை நீங்கள் கவனித் துப் பார்க்கவேண்டியது அவசியமாகும்.[35]

சகேயுவின் மனமாற்றம் அவரது வாழ்க்கையில் ஒரு வித்தி யாசத்தை உண்டாக்கியது. மனந்திரும்புதலைப்பற்றி நாம் கற்கும் சிறிய பாடம் இதுவேயாகும்.

## இரட்சிப்பைப்பற்றிய சிறிய பாடம் (லூக்கா 19:9-10)

சகேயுவின் வார்த்தைகளுக்கு இயேசு: “இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது” என்று பதில் தருகிறார் (வ. 9அ). இயேசு சகேயுவின் வீட்டிற்கு வந்ததால், சகேயுவின் வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது - சகேயு இயேசுவின் அன்புக்கும் இரக்கத் திற்கும் பதில் அளித்ததால் இரட்சிப்பு வந்தது.

மேலும் இயேசு: “இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக் கிறானே” (வ. 9ஆ) என்று கூறினார். பரிசேயர்கள், சகேயுவை ஆபிரகாமின் குமாரன் என்று நம்பவில்லை, ஆனால் இயேசு, சகேயுவை ஆபிரகாமின் குமாரன் என்று கூறினார். ஆபிரகாமைப் போன்றே சகேயுவும் விசுவாசம் பெற்றதால், சகேயு ஆபிரகாமின் குமாரன் என்று இயேசு கூறினார்.[36] ஆனால், தங்களது பாரம்பரியம் குறித்துப் பெருமை பாராட்டின யூதர்கள் இயேசுவை விசுவாசிக்காததால், ஆபிரகாமின் உண்மையான குமாரர்களாய் இருக்கவில்லை.

அடுத்ததாக, கிளர்ச்சியூட்டும் இவ்வார்த்தைகளை நாம் காணுகின்றோம்: “இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக் கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்” (வ. 10). நாம் அனை வரும் இழந்துபோனவர்கள்-நமது பாவத்தால் தொலைந்து போனவர்கள் என்று இவ்வசனம் அறிவிக்கின்றது. “இழந்து போனது” என்ற இவ்வார்த்தையை நம்மில் அநேகர் பிரசங்

*கத்தில் பலமுறை கேட்கிறோம். ''இழந்துபோனது'' என்ற வார்த்தை "இரட்சிக்கப்பட்டது" என்பதற்கு எதிர்ப்பதம் என்று சாதாரணமாக நினைத்து விட்டுவிடுகிறோம். ''இழந்து போகுதல்" என்பதன் மூலப்பொருள், தன் இடத்தில் இல்லாமல் போகுதல்'' எனவே அது மதிப்பில்லாமல்போகுதல் என்ப தாகும். இயேசுவால் இவ்விஷயம் லூக்கா 15ல் காணாமற் போன காசு, காணாமற்போன ஆடு, காணாமற்போன குமாரன் ஆகிய உவமைகளில் நன்கு விளக்கப்படுகிறது. மனிதன் தேவனை விட்டுப் பிரிந்து அதன் மூலம் தனது வாழ்வின் நோக்கத்தை நிறைவேற்றமுடியாமல் போகிறான். நீங்களும், நானும் நமது பாவத்தில் தொலைந்துபோகும்போது தேவனை மகிமைப்படுத்துவது என்ற நமது வாழ்க்கையின் நோக்கத்தை நிறைவேற்றமுடியாமல்போகிறது (மத்தேயு 5:13-16)!*

*இழந்துபோனதைத் தேடவே இயேசு வந்தார் என்ற இவ் வசனப்பகுதியே மிகவும் ஆச்சரியமானதாகும். ''தேடுதல்'' என்பது கவனத்துடன் செயல்படுவதாகும்; கண்டுபிடிப்பதற் குத் தன்னாலான எல்லாவற்றையும் செய்தல் என்று பொருள் படும். நம்மைக் கண்டுபிடித்து, தேவனிடத்தில் மறுபடி சேர்த்து, நாம் நிறைவேற்ற வேண்டியவைகளை நிறைவேற்றச் செய்வதற் காகவே இயேசு வந்தார்.*

*இதுவே இரட்சிப்பைப் பற்றிய சிறிய பாடம் ஆகும். இயேசு தேடவும் இரட்சிக்கவும் வந்தார். விரைவில் அவர் எரிகோவிலிருந்து எருசலேம் செல்லும் செங்குத்துப் பாதையில் சென்றுவிடக்கூடும். ஒரு வாரத்திற்குள்ளாக அவர் தனது விரோதிகளைச் சந்தித்து சிலுவை மரணத்தை ஏற்க வேண்டும், இவ்வுலகிற்கு இயேசு வந்ததின் காரணமும் அதுவேதான். (இயேசுவின் அழைப்பை நீங்களும், நானும் புறக்கணித்தால், நமது வாழ்வில் இயேசுவின் நோக்கத்தைத் தோற்கச் செய்தவர் கள் ஆவோம்)!*

*''சின்னஞ் சிறு பாவியான'' இந்த சகேயு இயேசுவைப் பின்பற்றும் ''மாபெரும் சிறு'' மனிதரானது எவ்வளவு விசே ஷித்த நாளாயிருந்திருக்கும்![37]*

## முடிவுரை

*சகேயுவின் இடத்தில் நம்மை வைத்துப் பார்ப்பது*

கடினமான காரியமல்ல. அந்தச் சிறு மனிதனைப்போல, நம்மில் சிலர் "மரத்தின் மேல்" இருக்கிறோம்;[38] நமது வாழ்வில் ஆவிக்குரிய அல்லது உணர்வுப் பூர்வமான நிலையில் குழப்பம் இருக்கலாம். நமது நிலை எதுவாக இருப்பினும், நாம் எங்கிருப்பினும், இயேசு கூறுகிறார்: "நான் உன் வீட்டிற்கு உன்னுடன் வர விரும்புகின்றேன்.'' சகேயுவைப் போல இயேசுவின் அழைப்பை நாம் ஏற்கவும் முடியும்; அல்லது அவரை மறுக்கவும் முடியும்.

அன்று காலை சகேயு பணியாற்றிக் கொண்டிருந்தபோது, அந்த நாள் எவ்வளவு உணர்வுப் பூர்வமாய் மாறப்போகிறது என்பதை அறிந்திருக்க முடியாது. உங்களுக்குக்கூட இன்றைய நாள் எப்படி ஆரம்பித்தது என்று எனக்குத் தெரியாது. ஒரு வேளை எழுந்தபின் இன்னும் நீங்கள் களைப்புடன், தூக்க மயக்கத்தில் இருக்கலாம். அல்லது இந்த நாள் இன்னும் நல்லதாக உங்களுக்குத் தோன்றலாம்.[39] எப்படியிருப்பினும், உங்கள் இருதய வாசல் அருகே இயேசு நின்று கொண்டு, உள்ளே வரலாமா என்று கேட்பதை நீங்கள் காண நேர்ந்தால், இந்தநாள் உங்களுக்கு எவ்வளவு சந்தோஷமானதாய் இருக்கும்! அவரது அன்புக்கு நீங்கள் செவிசாய்த்தால், "இன்றைக்கு (உங்கள்) வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது" என்று உங்களைப்பற்றியும் கூற முடியும்!

---

குறிப்புகள்

[1]ஒரு பிரசங்கத்தில் சகேயுவைப்பற்றி அறிந்த குழந்தைகள் கைகளை உயர்த்தும்படி கேட்கப்படலாம். [2]இந்தப் பாடலை குழந்தைகளுடன் பாடலாம். [3]ஒவ்வொரு பகுதிக்கு இவ்வார்த்தைகள் மாறுபடலாம். பிரிட்டனின் பிண்ணனியைக் கொண்ட ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் "தேநீர் அருந்துவோம் உன் வீட்டில்'' என்று கூறப்படலாம். [4]பதிவேடுகள் எழுதப்படுவதற்கு முன்பே இந்நகரம் இருந்தது என்பதே இதற்குப் பொருள் ஆகும். [5]எரிகோவில் ஏழடுக்குகள் ஒன்றின் மேல் ஒன்றாகக் கட்டப்பட்டுள்ளன. [6]இந்நகரம், "பனை மரங்களின்" நகரம் என்று அழைக்கப்பட்டது. [7]மார்க் அந்தோனி என்ற அரசன் தனது அன்பின் அடையாளமாக இந்நகரத்தை கிளியோபாட்ராவுக்கு கொடுத்ததில் இந்நகரின் அழகு வெளிப்படுகிறது. [8]மூல வசனத்தின் நேரடி மொழி பெயர்ப்பாகும். NIV மொழிபெயர்ப்பில் இது ''காட்டத்தி மரம்'' எனப்படுகிறது. [9]NASB மொழிபெயர்ப்புகளின் அடிக் குறிப்புகளில் மல்பெரி - அத்தி மரங்கள் என்று

குறிப்பிடப்பட்டுள்ளது. [10]KJVயில் "ஆயக்காரன்" என்றுள்ளது. அதாவது பொது ஊழியத்தில் உள்ள மனிதன் என்று பொருள்படும். உலகின் சில பாகங்களில் "ஆயம்" என்பது மது விற்கும் இடத்தைக் குறிப்பதாயுள்ளது.

[11]யோவான் ஸ்நானன், ஆயக்காரரிடம் "உங்களுக்குக் கட்டளையிட்டிருக் கிறதற்கு அதிகமாய் ஒன்றும் வாங்காதிருங்கள்" என்றார் (லூக். 3:13). [12]டல்மட் என்பது நியாயப்பிரமாணத்திற்கான யூதர்களின் விளக்க நூல் ஆகும். [13]மத்தேயு 11:19 மற்றும் லூக்கா 7:34லும் காண்க. [14]"மஃபியா" "தாதா" என்பது அநேக அமெரிக்கர்கள் அறிந்துள்ள வார்த்தைகள் ஆகும். இக்கருத்தை விளக்கும் மற்ற வார்த்தைகளும் பயன்படுத்தப்படலாம் (இங்கு உள்ளூர்க் கொள்ளைக் கும்பலின் தலைவன் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது). [15]சகேயுவுக்கு இவ்வளவு செல்வம் நேர்மையான முறையில் கிடைத்திருக்கவும் சந்தர்ப்பம் உண்டு; ஆனால் இவ்வார்த்தை இவ்வசன பகுதியில் கையாளப்பட்டுள்ள விதத்தை ஆராய்கையில் யூதர்கள் ஆயக்காரரைப்பற்றி எண்ணியிருந்த விதமாகவே சகேயு ஒரு திருடனாகவே இருக்க வாய்ப்புள்ளது. [16]வயது முதிர்ந்த அநேகரும் கூட தங்கள் குழந்தைப் பிராயத்தில் இவ்விதமாய் வெறுத்து ஒதுக்கப்பட்ட அனுபவத்தைப் பெற்றிருப்பர். அவைகளில் ஏதேனும் ஒரு சம்பவத்தை இதற்குப் பதிலாகக் கூறலாம். [17]வெள்ளம், புயல், சுழல்காற்று அல்லது மற்ற இயற்கை சேதாரங்களால் சமீபத்தில் ஏற்பட்ட அழிவுகள்பற்றிய செய்திகள் இவ்விடத்தில் கூறப்படலாம். நான் வாழும் இடமான அர்க்கான்ஸஸ் மாவட்டத்தின் ஜட்ஸோனியா என்ற இடம் 1952ல் ஒரு சுழல்காற்றினால் முற்றிலும் அழிக்கப்பட்டது. [18]KJVயில் எபி. 11:6ஐக் குறிப்பிடவும். இங்கு தேடுதல் என்ற கிரேக்க வார்த்தை "ஆர்வத்துடன் தேடுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. [19]ஒருவேளை சகேயு தனது உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு தான் அக்கூட்டத்திற்குள் நுழைந்து இயேசுவைக் காண முயற்சி செய்திருப்பார். இப்படியாக அவரது தீர்மானம் வெளியாயிற்று. [20]குழந்தைகளின் பாடல் ஒன்று இவ்விடத்தில் பாடி விளக்கப்படலாம். உதாரணமாக "சகேயு ஆயக்காரன் குட்டையானவன் ஹா ... ஹா ... ஹா ..." என்று பாடலாம்.

[21]குள்ளமானவர்கள் எழுந்து நின்ற பிறகும் கூட "எழுந்து நில்" என்று எத்தனை முறை சொல்லப்பட்டு இருப்பார்கள்! [22]கடந்த காலத்தில் இருந்த ஒரு நடிகர் ஆலன் லேடு ஆவார் - தற்சமயத்தில் டட்லி மூர், டஸ்ட்டின் ஹாஃப்மன், மற்றும் டேனி டெவிட்டோ ஆகியோரைக் கூறலாம். மேலும் குள்ளமான நடிகைகளும் இருக்கின்றனர். [23]ஆர்க்கி காரிசன் என்பவர் ஓக்லஹாமாவில் லோன்வுல்ஃப் என்ற இடத்தில் விவசாயப் பயிற்சி ஆசிரியராக இருந்தவர். எனது தகப்பனாருக்கு முன்னதாக அவர் அப்பணியில் இருந்தார். [24]எனது பேரன் சேத் வருகின்றபோது, ஒரு மரம் இருந்தால் உடனே அதில் ஏறிவிடுவான். [25]மனிதருக்குள் இருப்பதை அறிந்த அதே விதத்தில்தான் இயேசு சகேயுவின் பெயரையும் அறிந்திருப்பார் என்பதே எனது யூகமாகும் (யோவான் 2:24-25; லூக்கா 6:8; 11:17). [26]ஒரு பிரசங்கத்தில் நான், "ஆராதனை முடிந்த பின்பு நான் உங்களிடம் வந்து 'இன்று மதிய உணவு உங்கள் வீட்டில் தான்' என்று கூறினால் உங்களுக்கு எப்படியிருக்கும்?" என்று கேட்டேன். [27]லூக்கா சுவிசேஷத்தின் திறவுகோல் நோக்கங்களில் ஒன்று "சந்தோஷம்" ஆகும். "சந்தோஷம்" என்ற இவ்வார்த்தை அல்லது அதே அர்த்தமுள்ள வேறு வார்த்தை மட்டும் மொத்தம் இருபது முறை இச்சுவிசேஷத்தில் காணப்படுகிறது. [28]இயேசுவின் சீஷர்கள் சகேயுவின் வீட்டிற்குச் சென்றார்களா இல்லையா என்று வசனப் பகுதி கூறவில்லை. அவர்கள் சென்றிருப்பார்கள் என்றே நான் யூகிக்கிறேன். [29]மத்தேயு 9:11; 11:19; மாற்கு 2:16; லூக்கா 5:30; 7:34. [30]இது KJVயிலும் NIVயிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

[31]இது KJVயிலும் NIVயிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. [32]'இயேசு' என்ற திரைப் படத்தில், சகேயு தன் வீட்டுமுன் கூடியிருந்த பிச்சைக்காரர்களின் கைகளில்

*காசுகளைத் திணித்து சந்தோஷமாய்ச் சிரிப்பது போலச் சித்தரிக்கப்பட்டுள்ளது. இது நடந்ததா இல்லையா என்று நமக்குத் தெரியாது; இருப்பினும் சகேயுவின் வாழ்க்கையில் ஒழுங்கு நியதிகள் மாறியது உறுதியாகும். [33]எண்ணாகமம் 5:7; லேவியராகமம் 6:5. [34]யாத்திராகமம் 22:1, 4, 7. [35]சகேயுவைப்போல நம்மிடத்தில் தாராளமான மனமாறுதல் ஏற்படவில்லை யென்றால் நமது மனமாறுதலைப் பரிசீலனை செய்வது அவசியம் என்று ஒருவர் எழுதுகிறார். [36]கலாத். 3:29; ரோமர் 4:12; கலாத். 3:7. [37]சகேயு அதே வழியில் தொடர்ந்து நடந்தான் என்று பாரம்பரிய வரலாறு கூறுகிறது. அலெக்ஸான்டிரியாவைச் சேர்ந்த கிளமென்ட் என்பவர் இந்த சகேயு பின்னாளில் செசரியா சபையில் ஒரு மூப்பராக இருந்தார் என்று எழுதியிருக்கிறார். [38]"எப்படித் தொடர்வது என்று புரியாது தொலைந்துபோன நிலையில் இருப்பதை" இந்த விளக்கம் கூறுகிறது. [39]ஒரு பிரசங்கத்தில், நான் "இன்று இங்கு வருவதா இல்லையா என்பதில்கூட உங்களுக்குப் போராட்டம் இருந்திருக்கலாம்" என்று கூறினேன்.*

## இழந்துபோனதைத் தேடுதல்

*இயேசுவின் 'தேர்ந்தெடுப்புப் பட்டியல்' மிகவும் வியப்புக் குரியதாயுள்ளது: பன்னிருவரில் ஒருவராக ஆயக்காரன் மத்தேயுவைத் தேர்ந்தெடுத்தார். ஐந்து புருஷர்களையுடைய ஒரு பெண்ணுக்குக் கிணற்றண்டையிலும், சகேயுவுக்கு அவன் வீட்டிலும் போதித்தார்! சுவிசேஷ செய்திக்குக் கீழ்ப்படிவார் கள் என்று நாம் தயாரிக்கும் பெயர்ப் பட்டியலுக்கும் இதற்கும் எவ்வளவு வேறுபாடு காணப்படுகிறது! உண்மையாகவே இழந்துபோனதைத் தேட இயேசுவிடமிருந்து நாம் கற்றுக் கொண்டிருக்கிறோமா?*

*இயேசு தமது வாழ்வின் நோக்கங்களை அறிந்திருந்தார்: "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார்" (லூக்கா 19:10). தேவனே! இயேசு தமது ஊழியத்தில் தெளிவாய் இருந்ததுபோல நாங்களும் எங்கள் ஊழியத்தில் தெளிவாயிருக்க உதவும்!*